# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2413/37 - 2024 දෙසැම්බර් මස 04 වැනි බදාදා - 2024.12.04

2413/37 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2024, திசெம்பர் 04.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதி **"2024 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட, 2023, சனவரி மாதம் 01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.


1A - PG 6937 — 374 (2024/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1. வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர், கமத்தொழில், கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சர் முன்வைத்த 24/2067/817/001 ஆம் இலக்க ஒன்றிணைந்த விஞ்ஞாபனம் தொடர்பான 2024, நவெம்பர் 25 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கான 2024, திசெம்பர் 02 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுகின்றன.

2. 2023, சனவரி மாதம் 01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இவ் ஒழுங்குவிதிகளின் I மற்றும் V ஆம் அட்டவணைகளில் பட்டியலிடப்பட்டுள்ள 1006.30.19 மற்றும் 1006.30.29 ஆம் இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அரிசி இறக்குமதிக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் (ICL) தேவை, 2024, திசெம்பர் 02 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் இலங்கையின் துறைமுக /விமான நிலையத்திற்கு வந்தடைந்த, ஏனைய ஆவணங்களுடன் சுங்க நுழைவு பதிவு (சுங்க வெளிப்படுத்துகை) 2024, திசெம்பர் 04 முதல் 2024, திசெம்பர் 20 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் சுங்கப்பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் அரிசித் தொகைக்கு இத்தால் நீக்கப்படுகின்றது.

3. இவ் ஒழுங்குவிதிகளை மீறி இறக்குமதி செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளொன்றும் அதனோடு தொடர்பான அனைத்து செலவுகளும் இறக்குமதியாளரால் பொறுப்பேற்கப்பட்டு மீள் ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும்.

4. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம், உரிமம் பெற்ற வங்கிகள் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு ‘செயற்பாட்டு ஆலோசனைகள்’ வழங்கப்பட வேண்டும்.

5. இவ் ஒழுங்குவிதிகள் தொடர்பாக எழும் எந்தவொரு பிரச்சினை தொடர்பாகவும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் வினவி இறுதித் தீர்மானத்தை வழங்க வேண்டும்.

6. இவ் ஒழுங்குவிதிகள் 2024, திசெம்பர் 04 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

EOG 12-0079

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.